இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை போய்கையும் போன்றதே, ஈசனேந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஉ] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ தைமீ எ உ செவ்வாய்க்கிழமை (20 Jan. 1953) [இல - எ அ]

சேயின் எதிர்காலம் தாயிலே

அன்னையின் அறிவொழுக்கமே அத்திபாரம்

நம் நாட்டின் எதிர்கால எத்தல்களை மெருகுஏற்றி உருவாக்குவதில் பெற்றோரும் ஆசிரியரும் முக்கியமானவர் என்பது வெளிப்படை. ஏனெனில் அவர்கள் சிறுவரது உடலினதும் — உள்ளத்தினதும் வளர்ச்சிக்கு உதவியாக நிற்பதன் உயர்ச்சியுலகறிந்ததே. அவ் விரு வகையினருள்ளும் ஆசிரியரிடம் பிள்ளை கானுவதின் பின்னரே சேருகின்றான். அக் காலங்களிலும் மூன்று மணித்தியால நேரமே இளஞ்சேய் ஆசிரியருடைய அரவணைப்பில் அடங்க வேண்டியுள்ளது. அதன் முன்காலம முழுமையும் பெற்றோரிடமே பிள்ளை பயில்கிறது. பெற்றோருள்ளும் "ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" என்ற வாக்கிய உண்மைப் பிரகாரம தந்தையினும் அதிகமாகத் தாயே தன் சேயுடன் அதிகம் கலக்கிறாள். தாயும் சேயும் குழந்தைகளாகிறார்கள். அக் காரணமாக ஒரு சேயின் எதிர்கால ஏற்றம் அவனைப் பெற்ற தாயிடமே தங்கியுள்ளதென்றால் அது மிகையாகாது. அது எவ்வாறென்பதை யாராய்தலே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

தாயின் பெருமை

"தாலாட்டும் கையே கோனுட்சி நடத்த உதவுகிறது" என்பது ஆன்றோர் அமுத மொழி. இதனால் தாயின் பெருமையைத் தரணியறியும். தாயானவள் தன தருமைச் சேயை மடிமீது அமர்த்தி கீதம் இசைக்கிறாள்! 'கீத' இசையில் மெய்மறந்து அன்னை முகத்தை ஆர்வமுடன் நோக்குகிறது சேய்!! அந்த நேரம் தாயானவள்? பிள்ளையைத் தட்டிக் கொடுத்து உச்சி முகந்து முத்தம் ஈந்து தனது அமுதப் பாலை கருந்தக் கொடுக்கிறாள். இவ்வளவிலும் சேய்க்குத் தாயிடம் பாசம் வலுத்து விடுகிறது. குழலிசை கேட்ட நாகம் போன்று தாயின் இசை கேட்ட சேய் ஆட ஆரம்பிக்கிறது! தாயின் செயல் — நடை — பேச்சு ஆகியவற்றைப் பின் பற்றுகிறது. தன் வசமாகிய பாலைத் தான் நினைத்தபடி ஆட்டும் குறளனைப் போன்று தாயும் தன் பிள்ளையை ஆட்டலாம்! பிள்ளையை ஆக்கவும் அழிக்கவும் அவளால் முடியும். தாயின் இரத்தம் சேயின் உடலில் ஊறுவதுபோல, தாயின் செயல், பேச்சு, நடை முதலிய பாவும் சேயின் மூளைக்கமாக அமைந்து விடும். எனவே சேயின் வளர்ச்சிக்குத் தாயானவள் புத்திசாதுரியம் மிக்கவளாகவும் சேயின் உளப் பண்பினை அறியும் சக்தியுள்ளவளாகவும் பிள்ளையின் வளர்ச்சியில் ஏழமைச் சிக்கலை உண்டுபண்ணாது அதை மாற்றக்கூடிய சக்தி படைத்தவளாகவும் அமைந்துவிட்டால் அதைவிட வேறெதவும் பிள்ளையின் வளர்ச்சிக்கு வேண்டியிராது! அது ஒளறுமே "நன் நிலத்து இட்ட நெல்முளை போல்" வளர்ச்சிக்குப் போதியது.

தாயின் சொல் சேயிற்பதிதல்

சேயை அழ விடாது சித்திரையாக்கும் நோக்குடன் தாய் தாலாட்டுப் பாடல் பாடுகிறாள். அழுகையும் சிரிப்புமன்றி வேறு எதையும் அறியாத பச்சிளங் குழவி பாடமாக்கட்டுமென்று சொல்லிக் கொடுக்கிறாளா....? இல்லை. "கள்ளால்மயங்குவதுபோலே" தாலாட்டு கேட்டுக்கொண்டிருக்கும் குழந்தையின் மாசுபடியாத உள்ளத்திலே தாய் உரைக்கும் ஒவ்வொரு சொல்லும் 'பசுமரத் தாணி போல' ஊறுதியாகப் பதிகிறது. அவ்விதம் பதிவு பெறாது பெறாதுவிட்டால் அது தாயின் முகத்தை ஏறிட்டு நோக்கிக்கொண்டிருக்க காரண மில்லையே? அவ்விதம் பதிவு பெறும் பண்புகளே சேயுடைய பிற்கால வாழ்க்கையாக மிளிரும் என்பதை ஒவ்வொரு தாயும் சிந்திக்க வேண்டும். தாலாட்டும் ஒவ்வொரு பாட்டின் ஒவ்வொரு சொல்லும் பிள்ளைக்கு உறுதுணை பயக்க வேண்டும். கைபுறத்தி லேந்தி யூட்டும் கனகமுலைப் பாலானது மெய்ப்புறத்தே பதிந்து உறுதி பயக்கும். பாலுடனே அறிவும் கலந்து ஊட்டப்பட வேண்டும். சேய்க்கு "தொட்டிலிற் பூண்ட குணமல்லவா சுடுகாடு போம் வரையும்" மாறாது நின்று உதவுகின்றதென்ற உண்மையை ஒவ்வொருதாயும் நினைவிலிருத்திக்கொள்ளல் வேண்டும்.

இவ்விதம் வளர்ந்து வரும் சேய் தாயுடன் கூடவே தன் சூழலைப் படிக்கிறது. அவ்விடத்திலே சூழலைக்காட்டிக்கொடுப்பவர் தாயும் மற்றையோருமே. ஆங்கு காணும் காட்சிகள் பிள்ளையின் அறிவை வளர்க்கின்றன. அதற்கும் தாயே பிரதான உதவியாளராவர். சந்திரனுடன் விளையாட நினை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

ஆசிரியர்: அ சுப்பிரமணியம்

கோப்பாய்தெற்கு

58-வது இந்தியதேசியமகாநாடு

பலமுறை தலைமை தாங்கிய ஸ்ரீநேரு

அரசியல் ஞான அறிவுரை

—0—

"எல்லோருடனும் அன்பு கொள்ளுவதே நமது கொள்கை"

உலகெங்கணும் அரசியல் ஞானிகள் பலவேறு நாடுகளிற் பலவேறு காலங்களிற் றோன்றிப் புகழ் நாட்டிவந்தனரேனும், இந்தியப் பிரதமரும் பரத நாட்டு மா நாட்டுத் தலைமையை மக்கள் 'வகியுங்கள் வகியுங்கள் உங்கள் ஆயுளுள்வரை வகியுங்கள்! என்று இரந்து வேண்டிக் கொள்ள அரசியல் அறிவு செறியப் பெற்றவரான ஸ்ரீ நேரு 58-வது மகா நாட்டில் தலைமைதாங்கி நிகழ்த்திய தலைமை உரையை உற்று நோக்கும்பொழுது இவர் போன்ற அரசியற் பேரறிஞர் எக் காலத்திலும் இருந்ததுக்காரகள் என

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூறுவளிநட்டநிவாரணப்பங்கீடு

காந்தியசேவா சங்கத் தலைவர் கருத்து

சென்ற 11-1-53 ஞாயிற்றுக் கிழமை அகில இலங்கைக் காந்தியசேவா சங்கக் கூட்டம் நடைபெற்றது. "சமீபத்தில் ஏற்பட்ட புயலினால் யாழ்பாண மக்கள் அதிலும் விவசாயிகள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். பரிதாபமாகப் பாதிக்கப்பட்டவர்கள் நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி முதலிய வலி - கிழக்கைச் சேர்ந்த விவசாயிகளேயாகும். இந்த அல்லோலகல்லோலங்களுக்கு அரசாங்கத்தார் இதுவரை எந்த விதமான நிவாரண உதவிகளும் அளியாமல் இருப்பது மிகவும் வருந்தக்கூடியதே. இந்தப்பகுதிவிவசாயிகள் அரசாங்கத்தால் மாத்திரமல்ல எல்லோராலும் கைவிடப்பட்டுத் தவிப்பது மிகவும் வேதனைக்குரியது! இச்சங்கம் விவசாயிகளுக்கான ஒரு நிதியைச் சேர்க்கத் தொடங்கியுள்ளது. இன்றுவரை சேர்ந்த பணம், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வாழ்க்கை வசதியற்ற விவசாயிகளுக்கும் எவ்விதவேறு ஆதாரமுமின்றித் தவிக்கும் பாம ஏழைகளுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதற்காகவே இங்கு கூடியிருக்கின்றோம். தொடர்ந்து நிதி சேர்ச்சேரப் பங்கிட்டுக் கொடுப்போம். இலங்கையின் வேறு பாகங்களிலும் நிதிசேர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது" என்று தலைவர் திரு. S H. பேரின்பநாயகம் அவர்கள் தமது தலைமையுரையிற் கூறினர்.

உ

திகைப்பொன்றின்றி நின் திருவடியடைந்தேன்

திருச்சிற்றம்பலம்.

இயக்கர்கின்னரர்யமனொடுவருண ரியங்குதிவளிஞாயிறதிங்கண்
மயர்சமில்புலிவானரராகம் வசக்கன்வானவர்தானவரெல்லாம்
அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை யர்ச்சித்தார்பெறுமாறருள் [கண்டு
திகைப்பொன்றின்றிநின்திருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப் [புன்கூருளானே.

திருச்சிற்றம்பலம்.

அரசியல்அலை

தெருவில் விழுந்த மரங்கள் ஞாபக சின்னங்களா?

முட்டுக்கட்டைகளை நீக்க முயற்சிப்பாரில்லை

சூறாவளிக் காற்றடித்து மரங்களை வீழ்த்திப் பலவாரங்கள் கழிந்துவிட்டன. தெருவோரம் சாய்ந்த மரங்களை வீதியால் அகற்றவே பல நாட்கள் சென்றன. ஓரத்திலுள்ள மரக்கொட்டுகளை அப்புறப்படுத்தித் தெருப் போக்கு வரத்தைச் செவ்வனே ஒழுங்கு படுத்த இன்னமும் முடியவில்லையென்றால் அரசாங்க வண்டி உருளும் வகையை எவ்வாறுரைப்பது.

தெருவோரங்களில் விழுந்த மரங்கள் பழையபடி முளைத்து வேரூன்றுமுன் அரசாங்கத்தார் அவற்றை அப்புறப் படுத்தி வண்டிப் போக்கு வரத்துக்கு ஆபத்தைக் குறைக்கமாட்டார்கள் என்று சோதிடம் சொல்லுகிறார்கள் சிலர்.

மற்றுமோர் சுழல்காற்றுவீசி இம் மரத்துண்டுகளை அப்புறப் படுத்தும் வரைக்கும் அரசாங்கம அசையாதென்கின்றனர் இன்னொருசாரார்.

x x x

மக்களது அரசாங்கம் என்ற "பல்லக்குப் பேச்சு நடப்பது.... ....."

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

இந்துசாதனம்

யாழ். நந்தன வரு தைமீ எஉ செவ்வாய்க்கிழமை

சமயக் கல்வியா சமயப் பயிற்சியா?

=0=

ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் முதலாகப் பல்கலைக் கழகங்கள் ஈறாக எல்லா நிலையங்களிலும் சமயக் கல்வி அளிக்கப்படவேண்டுமென்றவெண்ணம் பரவிக் கொண்டு வருகிறது. பள்ளிக்கூடங்களிலே சமயக் கல்வியைப் பயிற்றுவதற்குத் தக்க ஆசிரியர்கள் இல்லை என்ற அபிப்பிராயம் பொதுவாகவுண்டு. இந்த நிலைமையை ஆராயுமிடத்துச் சமயவுணர்ச்சி ஏனைய பாடங்கள் போலக் கற்பிக்கப்படவேண்டியதா அன்றி ஒழுக்க நெறியாலாக்கப்படவேண்டியதா என்ற கேள்வி எழுகின்றது,

சைவக் கல்விக் கழகங்களை நோக்குமிடத்துக் காலையும் மாலையும் தேவாரபாராயணம் செய்வதும் குறிக்கப்பட்ட சமயபாட நூல்களைக் கற்பிப்பதுமாகு மொழுங்கே இப்பொழுதுண்டு. இவ்வளவில் நின்றுவிட்டாற் சமயவுணர்ச்சி சிறார்களுக் குண்டாகக் கூடிய நிலைமை ஏற்படுமா என்று கேட்கின்றோம்.

பள்ளிக்கூடங்களிலே ஆசிரியர் முன்மாதிரிகாட்டி மாணவர்களை அவ்வழி ஒழுகச் செய்து மதநெறியைக் கடைப்பிடிக்கும் மனஎழுச்சியை உண்டாக்க வேண்டியதே முறை. ஆகவே பாடஞ் சொல்லிக் கொடுப்போர் சைவாசார சீலர்களாயிருத்தல் இன்றியமையாததாகின்றது.

சைவசீலமென்பதென்னவென்றே யறியாது கல்விக்கழகங்கள் இக்காலத்திலிருக்கின்றன வென்றால் அது உண்மைக்கெதிராகாது. ஆசிரியர்கள் சைவமுறைப்படி நீறணிந்து பள்ளிக்கூடங்களிற் கடமையாற்றுகிறார்களா வென்றால் அஃதில்லை யென்றே சொல்ல வேண்டும். திருநீறும் உருத்திராக்கமும் பொலிந்த புனித ஆசான் திகழ்ந்த காலம் போய்விட்டது.

கற்காலம்போய்ப் பொற்காலம் ஆனதென்றால் நற்காலம் போய் துர்க்காலம் தொடங்கக் காரணமென்னையோ? தேவாரதிருவாசக தோத்திரப் பாக்கள் ஓதக் கூடிய ஆசிரியர்கள் இருக்கிறார்களா என்று வினவக் கூடிய நிலைமை வந்துவிட்டதே!

சைவத்திருநாட்களை நினைவுகூரும் பள்ளிக்கூட விழாக்களில் ஆசிரியர்கள் கலந்து கொள்வது மிக வரிதே. இவ்வாறானாற் சைவக்கல்வியை அளிக்கக் கூடிய ஆசிரியர்களை எங்கே பெறுவது?

சமயப்பயிற்சி அளிக்கக் கூடியவர்கள் ஆசிரியர்களாக அமர்ந்தால் அக்கல்விக்கழகத்திற் பயிலும் மாணவர்கள் மதவொழுக்கத்திற் றலைசிறந்து விளங்கக் கூடியவராவர். புலால் வெறுத்துப் புனித உணவு கொள்ளும் சைவாசிரியர்கள் உளரேல் அவர்பாற் கல்விபயிலும் மாணவர்கள் பொருந்தும் உணவைக் கொள்ளும் புனித பழக்கத்தைக் கைக்கொள்ளாது விடுவார்களா? காலையில் நீராடி நாள்மலர் கொய்து இறைவனை இறைஞ்சும் பழக்கம் கல்விக் கழக விடுதிச்சாலைகளிலுண்டா? தோய்த்துலர்ந்த ஆடை உடுத்தல் வேண்டும் என்ற நியதியை மாணவர் கைக்கொள்ளக்கூடியதாக ஆசிரியர் அவ்வாறு செய்கின்றனரா?

மந்திர உபதேசம் பெற்று மனத்தை நிலைப்படுத்தி மாதேவனை வழுத்தும் வழக்கத்தை ஆசிரியர் காட்டி வைத்தால் மாணவர்கள் சிறு பராயத்திற்றானே உடல்நலங் கொடுக்கும் உயிர் ஈடேற்றந்தரும் யோகாப்பியாசங்களைக் கற்றுக் கொள்ள மாட்டார்களா?

கல்விக் கழகங்கள் இவ்வாறு மதநெறியில் நில்லாது களியாட்டங்களிலும் வீண் விளையாட்டுக்களிலும் ஒழுக்கமற்ற செய்கைகளிலும மலிந்து கிடக்கின்றன. ஆசிரியர்களும் மாணவர்களும் தோழமைபூண்டு நிற்கப் பிள்ளைகள் பெற்றாருடன் பெரும் போட்டி நடத்துகின்றார்கள். பள்ளிக்கூடங்களுக் கருகாமையிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளில் வெள்ளைச் சுருட்டும் வேறு புகையிலைப் போலி உற்சாகமளிக்கும் பொருள்களும் ஏராளமாக விற்கப்படுவது பொதுவிதியாய்விட்டது.

இவ்வாறு மதவிரோதமான வழியிற் பழகும் பிள்ளைகள் பொதுவுடைமையினராகிப் புரட்சிக் கோலங்கொள்வது நூதனமன்று. இதற்குக் காரணர்கள் கல்விக் கழக மேற் பார்வையாளர்களும் ஆசிரியர்களுமே! இவர்கள் சைவ சீலராகத் திகழ்ந்தால் மாணவர்கள் பொதுவுடைமை பேச இடம்வரமாட்டாது.

எனவே உண்மையாக இப்போதைய இளைஞர்கள் எதிர்காலத்திற் பொறுப்புணர்ந்த மக்களாக வேண்டுமேயானாற் கல்விக் கழகங்கள் திருத்தியமைக்கப்படல் வேண்டும்! சமயக் கல்வி மாத்திரமன்று சமயப் பயிற்சியும் வேண்டும். ஆசிரியர்கள் ஆசாரசீலர்களாக வாழ்ந்துகாட்டி மாணவர்களை நல்லொழுக்கத்தில் அமரச் செய்தல் வேண்டும்.

சைவ நிலையங்கள் இவ்வழியிலோர் திருத்தத்தைக் உண்டுபண்ண முற்படுமுயலுதல் வேண்டும்.

58-வது இந்திய தேசிய மகாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ச்சொல்லுதல் உண்மையின் பாற்பட்டதே. பொன்னையை மொழிகளடங்கிய இவரின் சொற்பொழிவுப் புதையலில் எங்கே கைவைத்தாலும் எட்டுவது இரத்தினமும் வைடூரியமுமாகவே பிரகாசிக்கும்!

"எந்தஒரு சாதியினரும் ஏனைய சாதியினரை அடக்கி ஆள எத்தனித்தால் அல்லது எந்த ஒரு நாடும் வேறு நாடுகளில் ஆதிக்கம் காட்டத் துணிந்தால் உலகில் அமைதி நிலவ முடியாது' என்ற அரசியல் அறிவுரையின் அழகே அழகு!

அரும்பெரும் போதனைகள் அடங்கியிருக்கும் மொழி

கல்வித் திட்டத்தில் சம்ஸ்கிருதம் இடம்பெறவேண்டும்

சம்ஸ்கிருத மகாநாட்டின் கருத்து

சனிக்கிழமை (17-1-53) பரமேஸ்வராக்வாக் கல்லூரி மண்டபத்தில் நடந்த சம்ஸ்கிருத மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசும்போது வேதங்கள் உபநிடதங்கள் சமஸ்கிருதத்திலுள்ளன. அவற்றில் மக்கள் வாழ்க்கை, மாண்பு பெறுதற்கு வேண்டப்படும் அரும் பெரும் போதனைகள் அடங்கியிருக்கின்றன. தமிழைப்போற் பாளி மொழியிலும் பல சம்ஸ்கிருத மொழிகள் சேர்ந்துள்ளன. ஆகையினாலே இலங்கைப் பாடசாலைகளில் சம்ஸ்கிருதம் ஒரு பாடமாகப் படிப்பிக்கப்படவேண்டுமென்று கூறினார் திரு. க. நடேசன் அவர்கள்.

இது கல்வித் திட்டத்தில் இடம் பெறவேண்டு மென்ற ஒரு பிரேரணையும் பிரேரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பெற்றது

நாவலர் பேரர் சர்வ கலாசாலை வேண்டும்

நினைவுநாட்பேச்சுக்களாற் பயனில்லை!

சைவ உலகில் நாவலர் என்றால் எத்தனை நாவலர்கள் முன்தோன்றியிருந்தாலும் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரையே குறிக்கும். அவர்போல் நாவலர் முன னுமில்லைப் பின்னுமில்லை. சைவ உலகம் சிறப்பாக யாழ்ப்பாணம் செய்துகொண்ட புண்ணிய நிறைவே அவரின் தோற்றம். அப்பெரியாரின் குருபூசையைச் சைவ உலகெங்குஞ் செய்வது கண்டு மகிழ்தாம் ஆனால் அவர் காட்டிய நன்னெறியை நன்கு மதிக்கிறோமா? அவரை நேரே கண்டுகளிக்கப் பாக்கியம் பெறாதவர்கள் அவருடைய திருவுருவத்தைப் படங்களில் பார்த்திருப்பார்கள். அவரின் வடிவ தெரிசனம் பெரியபுராணத்திலுள்ள ஒரு செய்யுளை என் ஞ பகத்துக்குக் கொண்டுவருகிறது. அது பின்வருமாறு:-

"தூயவெண்ணீறு துதைந்த
பொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடிதைவரு
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர் பொழி
கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேய செவ்வாயு முடையார்
புகுந்தனர் வீதியுள்ளே."

அவர் சைவசாத்திரச் சமுத்திரத்திலாழ்ந்து ஆராய்ந்து சைவப்பண்புளாகும் முத்துக்களைச் சைவ உலகில் வாரிவாரி வீசினார். சைவ நூல்களின் செய்யுட் பாகங்களைச் செவ்வனே கற்றுணர்ந்து தீவ்விய வசன ரூபமாக அள்ளியளளிச் சொரிந்தார். பெரியபுராணச் சூசனம் காரைக்காலம்மையார்புராணம் வரையில்வரைந்துபகரித்தார். அதை நிரப்புவதற்கு இன்னுமொருவர் துணியாதது அவ் வசனங்களிலுள்ள நுண்பொருளும் கூர்ந்த மெய்ஞ்ஞானமும் போல ஆக்குதற்குத் தகுந்த நுண்மாண் நுழைபுலமில்லாமையல்லவா? அவர் தம் வாழ்வைச் சைவத்தொண்டுக்கே அர்ப்பணம செய்த அரும்பெரும் நைட்டிகப்பிரமசாரி சைவ வாழ்வின சீலங்களைச் சீராகத் தம் வாழ்வில் அமைத்துக் காட்டிய பெருங்குணமுடையார். விசேடமாக

"வாழ்வெனும் மையல்விட்டு
வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மையேடு
சைவமாம் சமயம் சாரு
மூழ்பெறலரிது சால
உயர்சிவ ஞானத்தாலே
போழின மதியஞ்சூடிப்
போற்றுவாருள்பெற்றாரே."

என்ற சித்தியார் கூற்றுக்கமைய வாழ்வபெற்ற புண்ணியப்பேறுடையார்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்கவதற்குத் தக"

என்ற பொய்யாமொழியார் கூற்றுக்கிணங்கத் தம் வாழ்வையமைத்த சீலமுடையார். தாம் பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம் என்று பிறவுமாறு விசேடமாகக் கூறிப் போந்தார். "இம் மனித சரீரம் கிடைத்தற்கரியது. இச் சரீரம் உள்ள பொழுதே சிவபூசைசெய்பண்ணி மோக்ஷத்தைப் பெறுதொழியில் பின்பு மோக்ஷம் கிடைத்தலரிது அரிது. ஆன்மாக்கள் தாம் நல்ல சரீரம் எடுத்தும் இவையெல்லாம் சிறிதும் ஆராயாமல் ஐடையோ வீணாகத்தரித்து காலங்கழிக்கும் அறியாமை இருந்தபடியென்னை!" அவரின் குருபூசை செய்வார்கள். அவரின் தொண்டைப் போற்றுபவர்கள் அவரின் சரித்திரப் பிரசங்கம் செய்பவர்கள், கச்சபைகளுக்கும் கூட்டங்களுக்கும் தலைமைவகிப்பவர்கள் தானும் அவர் நமக்களித்த நற்நெறியை நாடுகிறார்களா? எத்தனை பேர் சமய தீக்கை பெற்றவர்கள்? எத்தனை பேர் ஊன் உணவை யுதறித் தள்ளினவர்கள்? எத்தனை பேர் விசேட தீக்கை பெறாச் சிவபூசை செய்பவர்கள்? வெட்கம்! வெட்கம்!! இது எதுபோலிருக்கிறதென்றால் ஊன் விலாப்புடைக்க

தொடர்ச்சி 3-ம் பக்கம்

திரு. பொ. அப்புத்துட்டி அவர்கள் எழுதுவது

திருத்தொண்டர் திருநாள்

அரனடியாரை அரனென்னப் போற்றும் அரும்பேறு

நானெனதற்றார் தன் நாயகியின் கையைத் தறித்தார்

கலிக்கம்ப நாயனார் 21—1—53

திருப்பெண்ணாகத்திலே வணிகர் குலத்திலே தருவவதாரஞ்செய்தார் கலிக்கம்ப நாயனார் திருத்தூங்கானை மாடத்தி லெழுந்தருளியிருக்கும சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்தலும், சிவனடியாரைத் திருவமுது செய்வித்து வேண்டுவன கொடுக்குந் திருத்தொண்டுஞ் செய்து வந்தார்.

ஒரு நாள் மனைவியார் கரகரீர் வார்க்கத் தாம் அடியாருடைய திருவடிகளை விளக்கிக்கொண்டு வரும பொழுது, அவர்களுள் ஒருவர் தங்கள பணியாளராயிருந்தவரென நினைத்த கரகரீர் வார்க்க மனைவியார் தாழ்த்தினார். அதைக் கண்ட நாயனார் மனைவியாருடைய கையைத் தறித்துவிட்டுத் தாமே கரகரீர் வார்த்துத் திருவடிகளை விளக்கித் திருவமுது செய்வித்தார், இத்தகைய திருத்தொண்டை மேலும் செய்து வாழ்ந்து சிவபெருமானுடைய திருவடி நீழலையடைந்தார்.

நாயனார் இல்வாழ்க்கை வாழ்ந்தார். சிவதொண்டு செய்தார். சிவனடியாரைச் சிவனேனவே போற்றி வாழ்ந்தார், என்பன இங்கே உற்று நோக்கவேண்டிய சிறப்புக்கள். இவற்றாலும் சிவனடியாரை முறைப்படி முழுமனதுடன் வழிபடுதலில் பித்துக் கொண்டிருந்தாரெனபது மனைவியாருடைய கையைத் தறித்தமையாலறிய வருகின்றது,

"மறப்பித்துத் தம்மை
மலங்களின் வீழ்க்கும்
சிறப்பிலார் தந்திறத்துச்
சேவை—அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப்
பரனுணர்வி னாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை."

என்னும் சிவஞானபோதச் செய்யுளாலறியக் கிடக்கின்றபடி சிவனடியாரை முறைப்படி வழிபடுதலிற் பித்துடையராயிருத்தல் அடியாரின் சிறந்த இலக்கணமாதல் காண்க, அடியார்மீதுள்ள அன்புப் பெருக்காற் பித்துடையராயினார் என்பது பொருந்துமெனினும், மனைவியாருடைய கையைத் தறித்தமை பாவமாகாதோ வென்னில், ஆகாது, என்னை? பித்துடையராயினார் என்றலின அவர் எம்மனோரைப்போல் நான் எனது என்னும் பசுகரணமுனைப்பற்றுப் பரவசராயினரென்பதனாலெனக.

இதன் நுண்ணிய பொருள்கள் இக்கால விஞ்ஞான சாத்திரக் கலவி முதலிய துறைகளிற் பாண்டித்தியம் பெறுதலால் உணரற்பாலனவல்ல. வாழ்வு என்கின்றமையலொழிந்து மெய்யடியாரைச் சார்ந்து தாழ்வு என்னுந் தன்மையோடு சைவ நெறியில் வாழ்தலாலேயே உணரலாகும்.

சிவப்பொருளானது வேண்டுவார் வேண்டுவதே ஈயுமென்றலின் வேண்டுவார் வேண்டியவாறு முயலுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கச் சொல்லி

விளங்கவைத்த ஔவையார்

கிழலருமை வெய்யிலிலே நின்றறி
மின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்
மின்-பழகுதமிழ்
சொல்லருமை நாலிரண்டிற் சோ
மன் கொடையருமை
புல்லியரிடத்தே யறியின்போய்.

எவ்வளவு உயர்ந்த கருத்து இ பாட்டில் அடங்கியிருக்கிறது வெயிலின் கொடிய வெப்பத்தை அறிந்தவனே கிழலின் அருமையை அறிவான். அதேபோல கர்மத்தால் அடிபட்டு உழன்றவனே இறைவனுடைய திருவடியின் பயனை உணர்வான். கற்றவர்கள் பயின்று பழகுகின்ற நற்றமிழின் நயத்தை நாலடி கொண்ட நாலடியாரிலும் ஈரடி கொண்ட திருக்குறளிலும் அறியலாம்.

அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை ஒரு கவியிற் சுருக்கிச் சொல்கின்றார்.

ஈதல் அறம் தீவினை விட்டு
ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதலரிருவர் கருத்
தொருமித்து — ஆதரவு
பட்டதே இன்பம் பரனை
நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு!

திருக்குறள் 1330 பாக்களின் சாரத்தையும் பிழிந்து இச் சிறிய வெண்பாவில் வெண்ணெயாய்த் திரட்டி நமக்கு அளிக்கின்றார். தொண்டர் தொண்டர் பெருமையைக் கூறியது போதாதென்று துறவியின் பெருமையைக் கூற வந்தவர் துறவிக்கு வேந்தன் துரும்பு என்று துறவியின் மாண்பை உணர்த்துகின்றார்.

போந்த உதாரனுக்கு
பொன்தரும்பு சூரனுக்குச்
சேர்ந்தமரணம் சிறு
துரும்பு — ஆய்ந்த
அறிவோர்க்கு நாரியருந்
துரும்பாம் இல்லத்
துறவோர்க்கு வேந்தன்
துரும்பு.

உலக வாழ்க்கையை நலப்படுத்தும் பண்புகள், நலன்கள் உடன் பிறந்தார் சுற்றத்தார் பெற்றோர் மக்கள் மனைவி அவைகளும் அழிய ஒழிந்துவிடும்.

... "தொண்டன்" ...

பிள்ளைகள் நலனுக்குப் பெற்றோரொழுக்கமுந் தாய்மொழிக் கல்வியுந் தேவை

வியாவில் சைவபரிபாலன வித்தியாலய வேண்டுகோள்

நிகழும் நந்தன வருடம் மார்கழி மாசம் 24உ (7-1-53) புதன் கிழமை இவ் வித்தியாலயத்தின் பெற்றோர் சங்கக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

அவ்வமயம் வித்தியாலய முகாமைக்காரர் அவர்கள் தலைமை வகித்து, சைவ சமயத்தையும் தமிழையும் பரிபாலிப்பதற்காகச் சென்ற அறுபத்திரண்டாண்டுகளாக இவ் வித்தியாலயம் செய்து வரும் பெரு முயற்சிகளை எடுத்துரைத்து இவ் வித்தியாலயத்தின் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் நல்லொழுக்கமுடையவர்களாய் வாய்க்கப்பெற்றது. இறைவனின் பெருங் கருணையைக் காட்டுகின்றதென்றும், ஆகவே கல்வி கற்கும் மாணவர்களும் கல்விகற்று ஒழுக்கமுடையவர்களாய் வரத்தக்கதாகச் சிறந்த முயற்சிகள் செய்து வருவதாகவும், அதற்குப் பெற்றோர், பிள்ளைகள் பின்பற்றத்தக்க சிறந்த வாழ்க்கையை நடாத்தி முன்மாதிரியான சிறந்த சீவியத்தை நடாத்தித் துணைபுரியுமாறு அன்புடன் பெற்றோரைக் கேட்டுக்கொண்டார்.

காரைநகர் இந்துக்கல்லூரித் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான ஆ. தியாகராசா அவர்கள் "தாய்மொழி மூலம் கல்வி" என்னும் விடயமாகப் பேசும்பொழுது எம் இலங்கையில் தாய்மொழிமூலம் கல்வி கற்பிக்க ஆரம்பித்திருப்பது மிகவும் மகிழ்வடையத் தக்கதென்றும் உலகத்தின் பல பாகங்களிலும் தாய்மொழிமூலம் கல்வி கற்பிப்பதினால் கல்வி விருத்தியடைந்து வருவது காணக்கூடியதாக இருக்கிறதென்றும், நாம் அரசினரையே முழுதும் நம்பியிராது பெருமுயற்சியெடுத்து எங்கள் கலை வளர்ச்சியை ஆக்கித் தமிழை வளர்ச்சியடைய முயற்சி செய்யவேண்டுமென்றும் அறிவுறுத்தினார்கள்.

வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பண்டிதர் சு. இராமசாமி அவர்கள் "பெற்றோர் கடமை" என்னும் விடயமாகப் பேசுகையில் எம் மாணவர்கள் கல்வியில் விருத்தியடைந்து பெரியோர்களாக வாழ்க்கை நடத்துவதற்கு ஆசிரியர்களுடன் பெற்றோரும் சேர்ந்து துணைபுரிதல் வேண்டும் என்றும் பிள்ளைகளின் ஒழுக்கத்தைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கு ஆசிரியர் மாத்திரமன்றிப் பெற்றோரும் நல்லொழுக்கமுடையவர்களாய்த் தங்கள வாழ்க்கையை நடாத்தி வருதல் அத்தியாவசியம் என்றும் கூறினார்.

பிறபு தலைவர் குறிப்புரைகள் கூறியதும் திரு. ஆ. வேலுப்பிள்ளை ஆசிரியர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

நாவலர் பேரற் சர்வகலாசாலை வேண்டும்

2-ம் பக்கத்தொடர்ச்சி

வண்டு புலால் மறுத்தற் பிரசாரஞ் செய்ததுபோலல்லவா இருக்கிறது. மேலும் அவருடைய பாலபாடங்கள் சிறப்பாக நான்காம் பாலபாடம் எத்தனை பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கப் பெறுகின்றன. அவர் இடித்திடித்துக் கூறிப்போந்த புராண படனம் எத்தனை கோயில்களில் நடக்கின்றன உயர்ந்த முறையில் தமிழைக் கற்க ஏற்ற வித்தியாசாலைகள் எங்கிருக்கின்றன. சைவ சாத்திரம் கற்க என்ன வசதிகள் ஆக்கப்பெற்றிருக்கின்றன. சைவப் பிரசாரங்கள் அவர் விரும்பிய முறையில் எங்கு நடக்கின்றன. அவர் தொண்டுகளைப் போற்றும் நாம் அவர் காட்டியவழியில் ஒழுகாவிட்டால் அவரை ஏளனம் பண்ணியதாகவல்லவா முடியும் சிந்தியுங்கள். அன்பர்களே! இன்னே அவர் காட்டிய நற்நெறியைப் பின்பற்றி ஒழுகி ஆவனசெய்து தமிழையுஞ் சைவத்தையும் வளர்க்க முன்வாருங்கள். சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கவும், வேதநெறி தழைத்தோங்கி மிகு சைவத்துறை விளங்கவும் வேண்டியனவுடனே செய்ய ஒன்று சேருங்கள். வருடமொருமுறை கூட்டங்களை கூட்டிப் பேசிப் பொழுது போக்குவதிலாம் பயனென்ன. யாழ்ப்பாணத்தில் ஓர் சர்வகலாசாலையை ஆறுமுகநாவலர் அவர்கள் பேராலாக்க வாவன செய்ய வேண்டும். வழிவகைகள் உடனே தேடவேண்டும்.

அரசியல் ஆபாசம்

வேறெந்தநாட்டிலும் நடவாதது!

இலங்கையரசினர் இலங்கை இந்திய மக்களைச் சிலகாலமாகப் பல்லாற்றானும் புறக்கணிப்பதுபற்றி இந்திய அரசினர் பின்வருமாறு பேசுகின்றார்கள்:—

"இலங்கைச் சுதந்திர அரசினர் தம் நாட்டில் வசிக்கும் இலங்கையிந்தியர் காரியங்களில் இப்பொழுது கையாளத்தலைப்பட்டிருக்கும் முறைகள், அங்குள்ள இந்தியர்களைத் தம் நாட்டிலிருந்து அறவே அகற்றிவிடல் வேண்டுமென்ற தீய நோக்கத்தோடு கூடியதாகும்! தம் நாட்டில் வசிக்கும் இலங்கை இந்தியருக்கு இலங்கை யரசினர் கடைசியாகச்செய்திருக்கும் புறக்கணிப்புப் பிரமாணம் புதிய அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்காமல் விட்டதாகும்; அப்படியல்ல என்று இவர்கள் பங்கீட்டுப்புத்தகத்தைப் பெறவேண்டுமானால், 1949-ம் ஆண்டிற்கு முந்திக்குறித்த இந்தியர் இங்குவந்து குடியேறினரெனச் சாதன மூலமாக அத்தாட்சிப்பண்ண வேண்டுமாம்! இந்தக் கூடிய பிரமாணத்தாற் பாதிக்கப்பட்டு இடர்ப்படுவோர் இலங்கையிலுள்ள இந்திய தொழிலாளரேயாவர்; பங்கீட்டுப் புத்தகம் இல்லையாக, அங்குள்ள ஏழைகள் அரியாயவிலை கொடுத்து அரிசி வாங்கி வயிறு வளர்க்க வேண்டியவர்களாய்ப் பெரிதும் இடர்ப்படுகின்றார்களாம்! இலங்கையதிகாரிகள் தம் நாட்டுள்ள இந்தியரை அறவேயகற்றிவிடுவதற்காகத்தான் இப்படிச் செய்கிறார்கள். ஆனால் இப்படியான தடைப் பிரமாணம் எங்கள் இராச்சியத்திலே இல்லையாகும். சில நாட்கள் எங்கள் நாட்டில் வந்து சஞ்சாரஞ்செய்து போகிறவர்களுக்கும் உணவுக்காகிய அநுமதிச் சீட்டுக்களுக்கு ஒழுங்கு செய்திருக்கிறோம்!

இதுமாத்திரமல்லாமல், அங்குள்ள இந்தியர் இங்கே பணமனுப்பும் காரியத்திலும் பெருங் கட்டுப்பாடுகள் செய்யத் தலைப்பட்டுக்கொண்டனர். இப்படியான கட்டுப்பாடுகளும் புறக்கணிப்புப் பிரமாணங்களும் சுதந்திரத்தோடு கூடிய வேறு எந்த நாட்டிலும் இல்லையாகும்! இலங்கையிற் போயிருக்கும் தொகையிற் குறைந்தவர்களாகிய இந்தியரை இலங்கை அதிகாரிகள் நடத்தும் புறக்கணிப்பு முறையை இந்திய அரசனர் அவதானித்துக் காலந்தோறும் நிருபங்களை இலங்கையதிகாரிகட்கு விடுத்து வருகின்றனர்; இந்நிருபங்களும் ஆவறறிறகு இலங்கையர் விடுக்கும் பதிற் கடிதங்களும் நாளடைவில் வெளி வரும்"

"புகலியர்கோன்"

மானால், 1949-ம் ஆண்டிற்கு முந்திக்குறித்த இந்தியர் இங்குவந்து குடியேறினரெனச் சாதன மூலமாக அத்தாட்சிப்பண்ண வேண்டுமாம்! இந்தக் கூடிய பிரமாணத்தாற் பாதிக்கப்பட்டு இடர்ப்படுவோர் இலங்கையிலுள்ள இந்திய தொழிலாளரேயாவர்; பங்கீட்டுப்

நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்பு!

கார்த்திகை விரதநோன்பு!

கந்தபுராணம் — கந்தவிரதப்படலம் யாது கற்பிக்கின்றது?

"நாரதன்வினவியீதுநான்புரிந்திடுவனென்னப்
பாருலகதனில்வந்துபரணிநாளபராணத்தி
லோர்பொழுதுணவுகொண்டேயொப்பில்கார்த்திகைநாடன்னில
வீரவேற்றடக்கையண்ணல்விரதத்தையியறறலுற்றான்."

* * *

"அந்தநாள்செல்லப்பின்னருரோகணியடைந்தகாலைச்
சந்தியாதியமமெல்லாஞ்சடக்கெனமுடித்துக்கொண்டு
கந்தவேள்செம்பொற்றண்டைக்கான்முறைவழிபட்டேத்தி
வந்தமாதவர்களோடும்பாரணமகிழ்ந்துசெய்தான்."

* * *

"இப்படியாறுளில்விரதத்தையியல்பி?னாற்று
முப்புவனததின்வேண்டுமுறைமையடைந்தநீரார்
மெய்ப்படுதொகையையாரேவிளம்புவரீதேயன்றி
யொப்பருமிரதம்வேறுமொன்றுளதுரைப்பக்கேண்மோ!"

என்பன கொண்டாராயப் புகின், பரணி—கார்த்திகை—உரோகிணி என்னும் நக்ஷத்திரங்களை முறையேயுடைய மூன்று தினங்களாய்க் கார்த்திகை விரதம் தோற்றலே முறை என்பதைக் கற்பிக்கின்றன, நியதி இங்ஙனமிருப்பக் கணிதர்கள் தங்களின் பஞ்சாங்கங்களில் பரணி நாளபராணத்தில் கூடிநிற்குங் காலங்களிலுங்கூட பரணி குறித்த தினங்களில் கார்த்திகை விரதம் எனக் குறித்துவருகின்றனர், எவர் எங்ஙனமாகினும் (யாழ்ப்பாணம்) கொக்குவில் பஞ்சாங்ககணிதருமா அங்ஙனங் குறிக்கவேண்டும்! இவர்களின் (நிகழும்) நந்தன வருஷப் பஞ்சாங்கத்தில்:—

(1) ஆடிமா 1 ந் தேதி
நாழிகை 27—54 வரை.
(2) புரட்டாதிமா 21 ந் தேதி
நாழிகை 25—25 வரை.
(3) மார்கழிமா 13ந் தேதி
நாழிகை 22—59 வரை
(4) பங்குனிமா 6-ந் தேதி
நாழிகை 22—27 வரை

பரணி நக்ஷத்திரம் என்று குறிக்கப் பெற்றிருப்பதும், அந்தத்தினங்களில கார்த்திகை விரதம் என்ற குறிப்புக்களும் இடம்பெற்றிருக்கின்றன! கார்த்திகை விரதமிங்ஙனமாவது நியதியாயின் அதற்கு முன் சென்ற தினத்தில் பரிசுத்தமாய் ஒருபொழுதுணவுகொண்டு கார்த்திகை விரதாரம்பங் கொள்ள வேண்டும், அதற்கு அந்த முன்தின அபராண காலத்தில் ஒரு விநாடியேனும் பரணி நக்ஷத்திரத்திற்கு இல்லையே? அச்சுவினி நக்ஷத்திரமல்லவா இருக்கிறது. ஆகவே ஒருபொழுதுணவு கொள்ளும் பரணி நாளபராணம் இல்லாமற்போகின்றன! இதுமட்டுமா திண்டாட்டம்? விரத பூர்த்திக்காம் உரோகிணியும் ஏற்றமுறை தவறிப்போகின்றன. இங்ஙனமாய குழப்பங்கள் நிகழுங் காலத்தில் உலகப்பெரியார் ஏற்ற நியதிகளை எடுத்து விளக்கிப் பஞ்சாங்ககணிதர்களை எச்சரித்து வருவார்களேயானால் பஞ்சாங்ககளில விரதகாலங்கள் பிழைபெறாதனவாகும்.

நந்தனவருஷ கலைமகள் வாக்கிய பஞ்சாங்கம், நந்தனவருஷ தமிழக பஞ்சாங்கம் ஆதியவைகளில ஆடிமா 2ந் தேதியிலும், புரட்டாதிமா 22ந் தேதியிலும், மார்கழிமா 14ந் தேதியிலும் பங்குனிமா 7ந் தேதியிலும் கார்த்திகை விரதம் நியதிக்கேற்பக் குறிக்கப் பெற்றிருக்கின்றன. ... வருங்காலங்களிலும் இப் பஞ்சாங்ககளில் இங்ஙனமே குறிக்கப் பெற்றும்வரும். இறையருள் இனி தோங்குக.

விரதாபிமானி,
சிவசூரியநாராயணன்,
பஞ்சாங்ககணிதர்.
இட்டமொழி,
திருநெல்வேலி,
தென்னிந்தியா.

யாழ்ப்பாண ரஸிகரஞ்சன சபாவின் சங்கீத வகுப்பு ஆரம்ப விழா

சன்மார்க்கபோதனி சைவ ஆங்கில பாடசாலையில் யாழ்ப்பாண ரஸிகரஞ்சன சபாவின் சங்கீத வகுப்பை திரு. R. C. மன்மதராயன் அவர்கள் (M M C) ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் யாழ்ப்பாணமென்ற பெயரே இசையுடன் தொடர்புற்றிருக்கிறதென்றும், எம் முன்னோர் முத்தமிழையும் நன்கு வளர்த்தார்களென்றும், அவர்கள் தம் பிற்சந்ததியாருக்காக வைத்துச் சென்ற இக்கலைகள் பல ஆண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தனவென்றும், அக்குறையை நீக்குதற்காக இச்சங்கம் கடந்த சில மாதங்களாகத் தொண்டாற்றுவதுகண்டு தாம் சந்தோஷமடைவதாகவும், இச்சங்கம் பூரண பொலிவுடன் விளங்கத் தன்னாலான உதவியளிக்க என்றும் ஆயத்தமாகவிருப்பதாகவும், சங்கத்தின் நன்முயற்சி வெற்றியடையப் பெரியோர்களனைவரும் முன்வந்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். விழாவிற்கு திரு. இளையபிள்ளை ஆசிரியரவர்கள் தலைமைவகித்தார்கள்.

காளுக்குப் பாடங்களைத் தொடக்கிவைத்த ஆசிரியர்கள் திருவாளர்கள் க. நடராஜன், B. S. நாராயணன், S. சோமசுந்தரசர்மா ஆதியோர்களுக்கு விழாவை ஆரம்பித்து வைத்த பெரியாரால் குருதக்ஷணை வழங்கப்பெற்றது.

திரு. A. S, நாராயணன் அவர்களும் திரு. க. வை. தம்பு அவர்களும் உயர்தர பக்கவாத்தியங்களுடன் இன்னிசை விருந்தளித்தார்கள். சங்கீத வகுப்பில் ஓர் மாணவனாய்ச் சேர்ந்துள்ள செல்வன் சி. மனோகரன் சில பாட்டுக்கள் பாடிச் சபையோரை மகிழ்வித்தார்,

காரியதரிசி பேசுகையில் இச் சங்கம் தொடங்கிய ஒரு வருடத்துக்குள் சென்ற சித்திரை 19, 20, 21 ந் திகதிகளில் ஓர் மகத்தான இசை விழாவையும் இவ்வருடத் தொடக்கத்தில் ஓர் சங்கீத வகுப்பையும் ஆரம்பித்துள்ளதென்றும் சங்கத்தின் சாதனைகள் யாவற்றிற்கும் அங்கத்தவர்களின் நன்முயற்சியே காரணமென்றும், பிள்ளைகள் துறைந்தசெலவில் சங்கீதம் பயிலுவதற்காக ஆரம்பிக்கப்பெற்று இவ் வகுப்பு சனி, ஞாயிறு வாரங்களில் தொடர்ந்து நடைபெறுமென்றும், இவ் வகுப்புகளின் முன்னேற்றம் பெரியோர்களின் கையிலிருக்கிறதென்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேயின் எதிர்காலம் தாயிலே!

முதலாம் பக்கத் தொடர்ச்சி

த்த ஸ்ரீ இராமனுக்கு மந்திரி சுமந்திரன் சந்திரனைக் கிட்ட அழைத்துக் கொடுத்ததுபோல தாய்மாரும் சேயின் நோக்கமறிந்து ஏற்ற வழிவகுத்துக் கொடுக்க வேண்டும். பிள்ளை தன் கருத்தைச் சைகைமூலம் வெளிக்காட்டும். அதுபோன்று பிறர் சொல்லையும் அங்க அசைவு செயல்களின் மூலம் அறிகிறது. ஆகவே இவ்விடத்திலே தாயின் செயல் ஒவ்வொன்றும் அறிவை ஏற்றுவதாக அமைதல் வேண்டும்.

தாயின் செயல்கள்

தாய்மாரின் செயல்களிற் சில தீமையாக முடிவது அவர்கட்குத் தெரியாது. குழந்தை தவழவோ அன்றி நடக்கவோ தொடங்கியவுடன் தாயின் சங்கடம் சொல்லி முடியாது. கல், மண், கரி, அட்டை வண்டு ஆகிய யாவும் வயிற்றை நிரப்ப உதவும். கத்தி அரிவாள் முதலியவை விளையாட்டுப்பொருட்களாகிவிடும். வெயில், மழை, ஆடு, மாடு யாவும் விளையாட்டுத் தோழராகிவிடும். நெருப்புடன் விளையாடுவதுபோன்ற இவ்வுபாயத்தினின்றும் சேயை மீட்க வேண்டியவள் தாயன்றோ; இவ்விடத்திலே தான் தாயின் செயல்கள் சிலசேய்க்கு ஊக்கமுறணை உண்டு பண்ணுகின்றன. "தம்பிக்குக கால் முளைத்துவிட்டது; இருவாறன்; இப்ப பூச்சாண்டியைக் கூட்டியாறன்," என்றோ அல்லது "கத்தி வெட்டும்; நெருப்புச்சுடும்; தொடாதே" என்றோ பயம் ஊட்டிப் பாலரின் முனைப்பைக் கெடுத்துவிடுகின்றனர். பண்பட்ட உள்ளம் தாய் காட்டிய பூச்சாண்டியினாலே புண்பட்டு விடுகிறது என்பது தாய்க்கு எப்படித் தெரியும். அவள் வெளியே தோன்றும் காயத்தையல்லவா நீக்க முயன்றாள்.

தாயின் எண்ணம் பிள்ளை வெட்டு வாங்கித் துன்பப்படுவது என்பது. ஆனால் சேயின் எண்ணம் அதுவன்று. அது பயமறியாத இளங் கன்று. தாய் சொல்லைத் தட்டித் தனக்கொரு தீங்கு தேடாமல் இருக்க மாட்டாது. "அப்போது பிள்ளையை வெட்டுப்பட விட்டுவிடுவதா?" என்று கேட்கத் தோன்றுகிறது. வெளி அவயவத்தைப் பாதுகாத்தற் பொருட்டுக் கத்தியைப் பிடுங்கும்போது அது உள்ளத்தைக் கிளறிவிடுகிறதென்பதை உணரல் வேண்டும். இவ்விதம் இருபுறமும் குறைவுறாது வளர்க்க வழி உண்டு. அந்த முறையையே ஒவ்வொருதாயும் கடைப்பிடிக்க வேண்டும்.

இளஞ் சிறார்கள் காட்சிப் பொருட்களை நனகு விரும்புவர். அவற்றுள்ளும் கணகவர் வனப்பு வாய்ந்த பல வர்ணங்கள் பொருந்திய காட்சிப் பொருள்களை இன்னும் அதிகம் விரும்புவர். பிள்ளை முன் கண்ட பொருளில் (கத்தியில்) உண்டாய ஏதோ கவர்ச்சியின் காரணமாக அதை எடுக்கிறதே யனறி அதைக்கொண்டு வெட்டலாம் அல்லது அது தனக்கு வெட்டும் என்பதை அறியாது. அவ்விதம் அறியாத அபாயமூட்டும் ஒன்றை அறிவுப்படுத்தவதிலும் பார்க்க அதிலும் கவர்ச்சி கூடிய ஒரு விளையாட்டுப் பொருளை அப் பிள்ளைக்குக் காட்டினால், உடனே அது அதைநாடி ஓடி வந்து மலர் வதனத்துடன் அப் பொருளைப் பெற்று விளையாடும்.

அடக்கி ஒடுக்குதல் தீது

இளஞ்சேயின் வளர்ச்சி கற்களினாலே கட்டப்பட்ட சுவராக அமையாது தானே தோன்றிவளரும் மரம் போன்றது. மரமானது நான்கு திசைக்கும் கிளைகளைப் பரப்பி நிற்றல் போன்றும் நான்கு திசைக்கும் வேர்களைச் செலுத்தி உணவை எடுத்தல் போன்றும் பிள்ளை பல வழிகளாலும் அறிவைத் தேடுகின்றது. வளரும் கிளையை ஒடித்துவிட்டால் மரம் வளராது. அதுபோன்று வளரும் சிறு குழவியின் பிஞ்சுள்ளத்தை அடக்கியோ, ஒடித்தோ, வைதோ புண்படுத்தி விட்டால் அது ஒருபோதும் வளராது என்பதை நற்றாயர் கருதிக்கொள்ளவேண்டும்.

சில தாய்மார் பிள்ளைகளின் துஷ்டத்தனத்தைப் பொறுக்க முடியாது அவர்களை அடக்கப் பல உபாயங்களைக் கையாளுகிறார்கள். அதனால் வரும் கெடுதலை அவர்கள் ஒருபோதும் உணருவதில்லை. இவ்வகையான செய்கைகள் பிள்ளையின் வளர்ச்சிக்குப் பாதகமானவை. பிள்ளை பிறந்த நாள் தொட்டே அறிவு வளர்ச்சி பெற்றவருகிறது என்பதை ஒவ்வொரு தாயும் நன்குணர வேண்டும்.

அறிவூட்டும் வழி

ஒரு பிள்ளை பாடசாலைக்கு வந்தபின்னர்தான் அறிவைக் கிரகிக்கிறது என்ற எண்ணிய காலம் மலை ஏறிவிட்டது. பாலகுக இருக்கும்போதே, "... அண்ணாவுக்கு மூன்று வடை, எனக்கு இரண்டு தானா?" என்றும் "அயல்வீட்டு நடேசு நான்கு 'பட்டாஸ்' பெட்டி வைத்திருக்க, எனக்கு இரண்டு தானா?" என்றும் கேட்கும் சேயிடமே நோக்குமிடத்துப் பிள்ளையிடத்து எண்ணியறிவு வேரூன்றி விட்டதையறியலாம். அந்தவிடத்திலே புத்திச சாதுரியமான ஒரு தாய் தன் சேயை அணைத்து "இங்கு வா கண்ணே, உன் அண்ணாவுக்கு மூன்று வடை உனக்கு இரண்டுவடை; ஆகவே இருவரிடமும் உள்ளதெத்தனை? அண்ணாவிலும் நீ குறைவாக வைத்திருப்பதெத்தனை? நடேசு தளவு 'பட்டாஸ்' நீயும் வைத்திருக்க இன்னும் எத்தனை வாங்கவேண்டும்? இப் பெட்டியுள் இருக்கும் வடைகளை மூன்று மூன்றாகக் கொடு" என்ற முறையில் விளையாட்டாகப் பிள்ளையின் எண் வளர்ச்சியை வளர்க்க முடியும்.

தாயின் ஒழுக்கம்

மேற்கூறிய யாவற்றையும் விடத் தாய் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் தன்னைத் திருத்துதலாகும். பிள்ளை முதலிலே தாயின் முகத்தையே அறிகிறது, அதுவே அதற்குக் கண்ணாடியாகவும் அமைகிறது. தாயையே கேள்வி கேட்கிறது. கண்டதெதையும் "அது என்ன? இது என்ன?" என்று கேட்க வண்ணமே இருக்கும். பிள்ளை கேட்கும் சில கேள்விகட்கு விடை கூறக்கூடியதாக இருக்கும்; சிலவற்றுக்கு மறுமொழி கூறமுடியாதிருக்கும். சில தாய்மார் பிள்ளையின் தொந்தரவு தாங்க முடியாமல் கன்னத்திலோ முதுகிலோ தளிமபேற்றிவிடுகிறார்கள். அது பிள்ளையின் உள்ளத்தைச் சிதைத்துவிடுகிறது. தாயின் உள்ளத்திலே அன்பு இருக்கலாம், அவள் தன் உயிரையும் சேய்க்காக அர்ப்பணஞ் செய்யத் தயாராகவுமிருக்கலாம். ஆனால் அவளுக்குத் தன் சேயை எப்படிக் காப்பாற்றலாம் என்று தெரியாதுவிட்டால் அது பிள்ளையின் வளர்ச்சிக்குப் பெரும் தடையேயாகும். அத்தடையினாலே சேய் தாக்கப்பட்டால் அது தாய்மேல் போடக்கூடிய பெரிய பழியாகவே முடியும். ஆகவே சேய் உடல் உளம் ஆத்மா ஆகிய மூன்றிலும் குறைவின்றி வளர அதன் தாய் உதவ வேண்டும்.

"சான்றோ னாக்கல் தந்தைக்குக் கடனே" என்று கூறினாலும் சேயின் விருத்தியிலும் வளர்ச்சியிலும் தந்தையிலும் அதிகம் தாயே சேயிடம் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளுவதனாலும் பிள்ளையின் வளர்ச்சியும் தாயிடமே அதிகம் இருப்பதினாலும் தாயின் கடமைகளை அதிகம் எடுத்துக் காட்டப்பட்டன. சேயின் உயர்ச்சியிலே கருத்தூன்றிய ஒவ்வொரு தாயும் கவனித்துக் கருத்திற் கொள்ளக்கூடிய பொதுப்படையான விஷயங்கள் பயனளிக்கக் கூடிய முறையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

—இலங்கை வித்தியாபோதினி.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond, residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. January 20 1953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டு
வேலணை மேற்கு
சதாசிவம்பிள்ளை மகாலிங்கம்
வழக்காளி

இல- 5332

Vs

1. வேலணை மேற்கு
முத்து கணபதி சின்னத்தம்பியும் பெண்
2. ஷை வள்ளியம்மையும்
3. வண்ணார்பண்ணை கிழக்கு
K. சேனாதிராசாவும் பெண்
4. ஷை சிவஞானம்மாவும்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டு 5332 - ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1953 - ம் ஆண்டு மாசி மாதம் 13-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த லலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1810/= இதில் ரூபா 1300/=க்கு 23-3-49 தொடக்கம் 30 - 5 - 49 வரைக்கும் வருட மொன்றுக்கு நூற்றுக்கு 9 வீதமான வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் 30 - 5 - 49 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 186-68 இதில் ரூபா 125 - 00 கொடுபட்டது முதல் வட்டியிலும் ரூபா 950 00 கொடுபட்டது.

காணி விபரம்

தீவுப்பகுதி வேலணை மேற்கிறை குஞ்சிக்கலட்டி நிலப்பரப்பு 5 குளி 16½ எல்லை கிழக்கு செல்லையா மகன் இராசலட்சுமி வடக்கு ஐயனார்கோவிலாதனம் மேற்கு வேலுப்பிள்ளை தருமலிங்கம் தெற்கு சகலகத்தார் கேணி வயிரவ கோவிலாதனம். இதடங்கலும் தெற்கெல்லையில் இருக்கிற கிணற்றில் தண்ணீர்ப் பாயும் வழிவாய்க்கால் பாவிப்புரித்துமதற்குச் சேர்ந்தவைகளும்.

ஆ. ச. கந்தையா
A S Kandiah
கொம்மிஷனர்.

காரைநகர்
- 12 - 52.
M. 221 20—1—53.

சூதக வயிற்றுவலி சொல்லாமலே மறையும்.

கர்ப்ப எண்ணெய்

:: உபயோகியுங்கள் ::

மாத விலக்குக் காலங்களில் உண்டாகிற சூதகக் கட்டு, இடுப்புவலி, குத்தோடுகூடிய சூதகம், கை கால் குடைச்சல், மயக்கம், கர்ப்பச்சிதைவு, அகாலப் பிரசவம் முதலியவைகளைக் குணப்படுத்தி மாத விலக்கைக் கிரமப்படி வெளியேற்றிக் கர்ப்பமுண்டாக்குகிறது.

● புட்டி ஒன்றுக்கு விலை ரூ 3·00 ●

ஏஜண்டு:- S பொன்னுச்சாமிபிள்ளை,
133, தும்பகொடா தெரு, பலாங்கொடை. (r)
தலைமை ஆபீஸ் மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.

திறமான தேக்க மரங்கள் பல தினுசுகளிலும்

திறமான மூலிமரக்கிடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப்பெரிய நகை வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண ஐக்கியநாணயநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சரிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்முலமாக அறிந்துகொள்ளலாம்.
S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.